# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 17 வியாழக்கிழமை 30.05.2024 கதிர் 272







# தமிழரின் வாக்குகள் இத்தேர்தலிலாவது அவர்களின் உரிமைக்குரலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும்!

## யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை




தமிழ் மக்களின் வாக்குகள் இத்தேர்தலிலாவது அவர்களின் உரிமைக்குரலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும்!, என தெரிவித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து கூட்டாகத் தீர்மானமொன்றினை மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதற்கும் இணைந்து பயணிப்பதற்குமான எமது உடன்பாட்டினை மாணவர் சமூகமாக நாம் வெளிப்படுத்துகின்றோம், எனவும் அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் தொடர்பான பேச்சுக்கள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில், கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் பொறிமுறைகளிற்குள் சிக்குண்டு இனவிடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள், தமது அரசியல் விடுதலைப்பயணத்தில் இத்தேர்தல் களத்தினை தங்கள் நலன் சார்ந்து எவ்வாறானதாகக் கையாள வேண்டும் என்பதில் கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து, இனியாவது சுதாகரித்து முன்நகர வேண்டிய அவசியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் சாணக்கியம், ராஜதந்திரம் என்னும் பெயரில் வெற்று வாக்குறுதிகளை மாத்திரமே நம்பி தமிழ்த் தரப்புக்களால் முன்னெடுக்கப்படும் பேரம் பேசும் இணக்க அரசியலினால் தமிழினவழிப்பிலிருந்து தாயகத்தின் ஒரு அங்குல நிலத்தையேனும் காப்பாற்ற முடியவில்லை என்பதோடு, தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியற்கட்சிகளும் உதிரிகளாக்கப்பட்டுள்ளமையும் அது உளவியல் ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனநிலையினை மக்களிடையே விதைப்பதிலுமே வெற்றியடைந்துள்ளது.

1. ஈழத்தமிழ் மக்களை அரசியற்படுத்தி அணிதிரட்டுதல்.
2. போரிற்குப் பின் மக்களிடையே உள்ள தோல்வி மனோநிலையினை அகற்றுதல்.
3. வடக்கு -கிழக்கிற்கான பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவுதல்.
4. அரசற்ற தரப்பாக பன்னாடுகளைக் கையாள்வதற்கான வெளிவிவகாரக் கொள்கை மற்றும் கட்டமைப்பை உருவாக்குதல்.
5. பன்னாட்டுச் சமூகத்தில் கூட்டாகத் தமிழரின் குரலை முன்வைத்தல்.
6. வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பினை தடுத்துநிறுத்துதல்.
7. அதிகாரப்பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் தமிழ் அரசியலை நகர்த்துதல்.

2➤

# பல்கலைக்கழக ஊழியர்களை பணிக்குத் திரும்பப் பணிப்பு!

நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலம் கருதி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இம்மாதம் இரண்டாம் திகதி முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாக உத்தயோகத்தர்கள் மற்றும் போதனைசாராப் பணியாளர்களை உடனடியாகப் பணிக் குத் திரும்பப் பணித்து அந்தந்தத் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் போதனைசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பல இணைந்து தங்களது சம்பள முரண்பாடு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 27 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய இது தொடர்பாக பல அமைச்சரவைப் பத்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் தொடர்சியாக ஆராய்ந்த அமைச்சரவை, நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது. இதன் மூலம் உங்களுக்குப் பொருத்தமான தீர்வு கிட்டும் என நம்பப்படுகிறது.

தொழிற்சங்கப் போராட்டத்தால் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு நாட்டின் நற்பிரஜைகளாக உங்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டு, பல்கலைக் கழகங்கள்

2➤



# கடற்படை முகாமுக்குக் காணி சுவீகரிக்கும் முயற்சிக்கு மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்பு

## அளவீட்டுப் பணி நிறுத்தம்

யாழ்ப்பாணத்தில் கடற்படை முகாமுக்காகக் காணி சுவீகரிப்பதற்கான நில அளவைப் பணிகள் மக்கள் போராட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

சுழிபுரம், காட்டுப்புலம் பகுதியில் உள்ள 4 பரப்பு தனியார் காணிகளைக் கடற்படை முகாம் அமைப்பதற்காகச் சுவீகரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக இன்று குறித்த காணிகளை நில அளவை செய்வதற்காக நில அளவை

2➤

# படையினரின் தேவைக்காக பொதுமக்களினது காணிகளை சுவீகரிக்க அளவீடு செய்யக்கூடாது!

## யாழ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்



யாழ் மாவட்டத்தில் படையினரின் தேவைக்காக பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் காணிகளை அளவீடு செய்வதை நில அளவைத் திணைக்களம் நிறுத்த வேண்டுமென யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்

2➤

# தேர்தலின்றி ஜனாதிபதி ரணில் தொடர்ந்தும் பதவியில் ஐ. தேசியக் கட்சி செயலாளரின் கனவாகவே அமையும்!

## உதய கம்மன்பில எம்.பி. தெரிவிப்பு



அரசியலமைப்பின் 83வது சரத்தின் பிரகாரம் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதி தேர்தலை பிற்போட முடியும் எனவும், ஆனால் அவ்வாறான வாக்கெடுப்பில் அரசாங்கம்வெற்றிபெற முடியாது எனவும்

2➤

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஓர் அரசற்ற தரப்பாக எமது தமிழ்ச் சமூகத்தினால் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட விடயங்களெதனையும் சாதித்திராத தமிழ் அரசியற் தரப்புக்கள் தொடர்ந்தும் பேரம் பேசும் அரசியலால் இனியும் எதையாவது சாதிக்கும் என்பதில் நம்பிக்கையில்லை. தமிழ் அரசியற்கட்சிகளும், குடிமக்கள் சமூகத்தினரும் தமிழ் மக்களின் பின்நோக்கிய இந்நிலையிலாவது தம்மைச் சுதாகரித்துக் கொண்டு தமிழ் அரசியலின் பாதையினை மீளச் சரிவரத் தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த 2010, 2015, 2019 ஆண்டுகளில் நடைபெற்ற சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல்களில் இனப்படுகொலைப் பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் குற்றத்தைப் புரிந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவினைப் பெற்ற நபர்களுக்கே வாக்களிப்பதற்குப் பரிகார நீதி கோரக்கூடிய தமிழ் மக்கள் தவறாக வழிநடாத்தப்பட்டோம்.

இனியாவது ஏமாற்று கபட அரசியலிற்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித்தரப்புக்களுக்கோ சென்றுசேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களை தமிழ் அரசியற் தரப்புக்கள் மேற்கொள்ளத் தவறுமேயானால் நாம் அரசியல் பிழைத்த மக்களாக்களாக்கப்படுவோம்.

சமகால அரசியற் களச்சூழலில் தமிழ் மக்களின் முன்னால் உள்ள தெரிவுகள்,

1. சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல்.

2. சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் தற்போது எதிர்பார்க்கப்படும் தேர்தலை நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான அறைகூவல் விடுக்கும் பொதுவாக்கெடுப்பாகக் கையாளும் வகையில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துதல்.

சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல் இரண்டும் ஒரே கருத்தியலின் இருவேறுபட்ட பிரயோக வடிவங்களே! தமிழர்களால் அளிக்கப்படாத வாக்குகள் மற்றும் பொதுவேட்பாளருக்கு வழங்கப்படும் வாக்குகள் என இரண்டுமே சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதத்தின் முகவர்களை நிராகரிக்கும் வாக்குகளேயாகும். பொதுவேட்பாளர் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த தமிழ் மக்கள் உள்ளிட்ட தொடர்புபட்ட தரப்புக்கள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம்.

1. சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணிப்பதனாலோ, தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதனாலோ சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர் எவர் வென்றுவிடக் கூடும் எனும் கேள்வி பொதுவில் அனைவரிடமும் எழக்கூடியதொன்று. ஆனால், அரசியல் விடுதலை வேண்டும் சமூகமாக எமக்கு எது தேவை? எமது நிலைப்பாடு என்ன? என்பதுவே நாம் அக்கறை கொள்ளவேண்டியது. அதன் பக்க விளைவுகளைப் பற்றியல்ல.

2. பொதுவேட்பாளரை நிறுத்துதல் என்பது எதிர்வரும் சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைத் தமிழ் மக்களின் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தேர்தல் ஒன்றாக மாற்றுவதேயாகும். ஆகவே, பொதுவேட்பாளர் எனும் எண்ணக்கரு நடைமுறையில் வெற்றி - தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

3. பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் இதுவரைகால வேணவாக்களை பிரதிபலிக்க வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட சில தரப்புக்களின் அரசியல் நலன்களையல்ல.

4. பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் குறியீடாக நிறுத்தப்பட வேண்டும். முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை அடையாளப்படுத்தும் வகையில் கிழக்கிலிருந்து வேட்பாளர் தேர்வு நடைபெற வேண்டும். அவ்வேட்பாளர் பெண்ணொருவராக இருப்பின் உத்தமம்.

5. தமிழ்மக்களின் வாக்குகள் என்பது அவர்தம் வேணவாக்களைச் உறுதிபடச் சொல்வதற்கேயன்றி பேரங்கள் பேசுவதற்கல்ல. ஆகவே இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் என்ற பேச்சுக்களுக்கே இடமளித்தல் கூடாது.

6. பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் நபர் அரசியல்வாதியல்லாதவராக இருப்பதோடு, தேர்தலின் பின்னர் அந்நபர் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படுவதோ, தேர்தல் அரசியலில் ஈடுபடுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என்பது முன்நிபந்தனையாக்கப்பட வேண்டும்.

மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மக்களின் வாக்குகள் இத்தேர்தலிலாவது அவர்களின் உரிமைக்குரலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். மேற்கண்ட தெரிவுகளில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும்இணைந்து கூட்டாகத்தீர்மானமொன்றினை மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதற்கும் இணைந்து பயணிப்பதற்குமான எமது உடன்பாட்டினை மாணவர் சமூகமாக நாம் வெளிப்படுத்துகின்றோம். தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுடனான பேரம் பேசலுக்காகப் பலியாக்கப்படாது. தமிழ்மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, தமிழ் அரசியற்கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் ஒன்றுபட்டுத் தீர்க்கமான முடிவொன்றினைத் திடசித்தத்துடன் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம் - என்றுள்ளது. (01, 04)

## பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடையூறின்றி இயங்குவதற்காக உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்." - என்றுள்ளது.

இதேவேளை, தங்களுடைய கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்கும் வரை தாம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும், இனிவரும் காலங்களில் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தவுள்ளதாகவும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு நேற்றிரவு அறிவித்திருந்தது. எனினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் பணிப்புரை பற்றி ஆராய்வதற்காக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவின் பிரதிநிதிகள் இன்றிரவு நிகழ்நிலையில் கூடவிருக்கின்றனர். (அ)

## தேர்தலின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிவித்துரு ஹெல உறுமியவின் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்கு 50வீதத்திற்கும் அதிகமான மக்களின் கருத்தைப் பெறுவது மிகவும் அவசியமானது எனவும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாத அரசாங்கத்தால் அவ்வாறான இலக்கை அடையவே முடியாது எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து வேட்பாளர்களும் போட்டியிட்டாலும், சர்வஜன வாக்கெடுப்பில் அரசாங்கத்திற்கும் மற்றுமொரு முகாமுக்கும் இடையிலேயே போட்டி நடைபெறுவதாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார். இந்தப் பின்னணியில் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒத்திவைத்து ஜனாதிபதி விக்ரமசிங்ஹவை தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பதென்பது ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளரின் கனவாக மாத்திரமே இருக்கும் எனவும் கம்மன்பில சுட்டிகாட்டினார். ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றால் ஐந்தாண்டு காலத்துக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும், ஆனால் அதற்கு முகங்கொடுக்காமல் இரண்டு வருடங்கள் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்பதானது தமது கட்சி தேர்தலில் தோல்வியடையும் என்ற பயத்தின் வெளிப்பாடேயாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெம-106)

## படையினரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் ஆகியோரின் தலைமையில் இன்று நடைபெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், காணி சுவீகரிப்புத் தொடர்பிலும் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும், அதனை நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் கருத்து வெளியிட்டார்.

மேலும், யாழ் மாவட்டத்தில் படையினருக்காக பொது மக்களின் காணிகளை சுவீகரிக்க தொடர்ந்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய இன்றும் கூட சுழிபுரத்தில் மக்களின் காணிகளை படையினருக்கு சுவீகரிக்கும் நோக்கில் நில அளவீடு செய்ய இருந்தனர்.

எனினும் காணி உரிமையாளர்கள், பொது மக்கள் திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியதால் காணி அளவீடு செய்ய அங்கு வந்திருந்த நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றிருக்கின்றனர். இவ்வாறு பல இடங்களிலும் காணி அளவீடு செய்ய வருகின்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

பொது மக்களின் காணிகளை படையினருக்கு வழங்க முடியாது. அத்தோடு படையினருக்கு சுவீகரிக்கும் நோக்கில் அளவீடு செய்வதையும் நிறுத்த வேண்டும் என்பது தொடர்பாக தீர்மானமொன்றை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இதன் போது படையினரின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வையுங்கள், என நில அளவைத் திணைக்களத்தினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்தார்.

இதனையடுத்து யாழ் மாவட்டத்தில் படைகளின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதை நில அளவைத் திணைக்களம் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் அத் தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் முன்மொழிய, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் வழிமொழிந்தார். இக்கூட்டத்தில் இராணுவத்தினர், பொலிஸார், அரச திணைக்கள அதிகாரிகள், அரசியல்வாதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01, 04)

## கடற்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திணைக்கள உத்தியோகத்தர்கள் காணிக்கு வருகை தந்தபோது, அங்கு கூடியிருந்த மக்களின் எதிர்ப்பால் அவர்கள் காணி அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ளாது திரும்பிச் சென்றனர்.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்களுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)



# அம்பாறை மாவட்டத்தில் நாளையதினம் புகைத்தல், மது எதிர்ப்பு நிகழ்வுகள்

(எம் எப். நவாஸ்)

நாளை 31ஆம் திகதி சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தினையொட்டி, அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலிலும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்ஏசி. அகமது ஷாபிர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன் பிரதான நிகழ்வு அம்பாறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள்எனப்பலரும்கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்வாண்டுக்கான புகைத்தல், மது எதிர்ப்பு தினத் தொனிப்பொருளாக – “நண்பா போதைக்கு, புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் - வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டி எழுப்புவோம்” என்பது அமைந்துள்ளது.

அத்தினத்தினையொட்டி மரதன் ஓட்டப்போட்டி, புகைத்தல் எதிர்ப்புக் கொடி விற்பனை, வீதி நாடகங்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுகின்றவருக்கு 15,000 ஷரூபாவும், இரண்டாம் இடத்துக்கு 10,000, மூன்றாம் இடத்துக்கு 7,500, நான்கு மற்றும் ஐந்தாம் இடங்களை பெறுகின்றவருக்கு தலா 5000 ஷரூபா வீதமும் வழங்கப்பட உள்ளதுடன் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட இருக்கின்றனர்.




# வட மாகாண பெண்கள் குத்துச்சண்டை முல்லைத்தீவு மாவட்டம் சாதனை வெற்றி!



வட மாகாண பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டிகளில் 5 நிறைப்பிரிவுகளில் தங்கம் வென்று முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணி முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது. கடந்த 25, 26 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி உள்ளக அரங்கில் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் பெண்களுக்கான குத்துச்சண்டை போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

பெண்கள் அணியில் முல்லைத்தீவு மாவட்டம் - 5 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று முதல் இடத்தினைப் பெற்றது. வவுனியா மாவட்டம் - 3 வெள்ளி, 2 வெண்கலமும், கிளிநொச்சி மாவட்டம், 1 வெண்கலப் பதக்கத்தையும் பெற்றன.

இந்தப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக உடையார்கட்டு, இரணைப்பாலை புதுக்குடியிருப்பு, செல்வபுரம், உண்ணாப்பிலவு, கரைச்சிக்குடியிருப்பு, உடுப்புக்குளம், அளம்பில், தண்டுவான், பழம்பாசி கற்சிலைமடு கரிப்பட்ட முறிப்பு, மாங்குளம், பாண்டியன்குளம், கரும்புள்ளியான் முதலான கிராமங்களைச் சேர்ந்த வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர். (04)



# மாற்றுத்திறனாளிகளுக்கு உளவளப் பயிற்சி நிகழ்வு

*கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி மற்றும்பூநகரி ஆகியபிரதேசசெயலர்பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்டமாற்றுத்திறனாளிகளுக்கான உளவள பயிற்சி நேற்று (29) நடைபெற்றது.*

*ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன், உணவுப் பாதுகாப்பு மற்றும்வாழ்வாதார அவசர உதவித்திட்டத்தின் கீழ் குறித்த பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.*

*சிறுவர்கள் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எம். கமகேயின் பங்குபற்றலுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.*

*குறித்த உளவளப்பயிற்சியில், பச்சிலைப்பள்ளி மற்றும்பூநகரி ஆகியபிரதேசசெயலர்பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 50 மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டிருந்தனர்.*

*பயிற்சியின் இறுதியில் 12,000 ஷரூபா பெறுமதியானஉணவுமுத்திரைவழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

*இந்நிகழ்வில் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் உத்தியோகத்தர்களான ஆர்.கல்பனா, அமிர்தா கிங், மாவட்ட சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகதர், மாவட்ட உளவளத்துணை உத்தியோகத்தர், மாவட்ட சிறுவர்மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர், பூநகரி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகதர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டிருந்தனர். (02)*



# பிரித்தானிய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது 5 வாரங்களில் பொதுத்தேர்தல் என அறிவிப்பு!

பிரித்தானிய நாடாளுமன்றம் உத்தியோகபூர்வமாக இன்று கலைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் பொதுத் தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி நடத்தப்படும் என அந்நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் அண்மையில் அறிவித்திருந்தார்

இதன்படி பிரித்தானிய நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் கடந்த 24ஆம் திகதி முதல் இடை நிறுத்தப்பட்டுமிருந்தன.

அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற இடைத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றிருந்தது.

அதனையடுத்து, பொதுத் தேர்தல் தொடர்பான பெரும்பாலான கருத்துக் கணிப்புகளில், பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி தோல்வியடையும் என்றும் தெரியவந்திருந்தது.

இந்த நிலையில் இன்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதோடு, 5 வாரங்களின் பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)



## வங்கிக் கடன்களுக்கான வட்டி குறைப்பின் பலனை கடன் பெறுவோருக்கும் வழங்கப்படல் வேண்டும்

### வங்கிகளுக்கு மத்திய வங்கி ஆளுநர் பணிப்புரை



வங்கிக் கடன்களுக்கான வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு மேலும் வாய்ப்புள்ளதால், கடனாளிகளுக்கு விரைவில் வட்டி வீதக் குறைப்பு வழங்கப்பட வேண்டுமென வங்கிகளுக்கு மத்திய வங்கி அறிவிக்கும் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் வங்கிகளின் தலைவர்களுக்கு தாம் தொடர்ச்சியாக அறிவித்துள்ளதாகவும் அவர்களுடன் கலந்துரையாடி தகவல்களை பெற்றுக் கொள்வதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். மத்திய வங்கியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வட்டி குறைப்பின் பலன் விரைவில் நடைமுறைக்கு வரவேண்டும் என வலியுறுத்துவதாகவும், வைப்பு வட்டி விகிதங்கள் குறைந்துள்ளதால் வங்கிகள் கடன் வட்டி விகிதத்தை மேலும் குறைக்க இடமுள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடன்வட்டி விகிதங்கள் மேலும் குறைப்பதற்கு இடமிருப்பதால், தற்போது நடைமுறையிலுள்ள மத்திய வங்கியின் கொள்கை வட்டி விகிதங்களை மாற்றமில்லாமல் பேணுவதற்கு மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக மத்திய வங்கி ஆளுநர் மேலும் தெரிவித்தார். (ரெம-103)

## அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பற்றிய விபரங்களை வழங்குமாறு கூறுவதை புதியதொரு சட்டமாக கருத வேண்டாம்

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

இந்நாட்டு மக்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பற்றிய விபரங்களை ஜூலை 1ஆம் திகதி முதல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் என்ற வர்த்தமானி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டாலும் அது புதியதொரு சட்டமல்ல என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 123(8) இன் படி வருமான வரி திணைக்களத்திற்கு மூன்றாம் தரப்பினரிடமிருந்து தகவல்களை பெறுவதற்கான உரிமையை பயன்படுத்துவது மட்டுமே இதில் இடம்பெறுவதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த காலத்தை பாதிக்கும் வகையில் இந்த விதிகள் ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படாது எனவும், செயலற்ற நிலையில் இருந்த சட்டத்தை மீண்டும்



செயல்பட செய்வதற்கான சுற்றறிக்கையே இது எனவும், அதன்படி கடந்த மார்ச் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மே 21ஆம் திகதி அமுல்படுத்துவது தொடர்பான அறிவிப்பை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் வெளியிட்டார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-104)

## இரண்டாவது தடவையாகவும் நாட்டை வங்குரோத்து நிலையை நோக்கி அரசாங்கம் கொண்டு செல்கின்றது

### ஐக்கிய மக்கள் சக்தியின் எரான் விக்கிரமரத்ன எம்.பி. எச்சரிக்கை

இரண்டாவது தடவையாகவும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை நோக்கி அரசாங்கம் நகர்ந்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மேலும் இங்கு அவர் தகவல் பகிர்ந்தபோது - "இந்த வாரம் நாடாளுமன்ற குழுவுக்குக் கிடைத்த அறிக்கைகளின்படி, 2023 ஆம் ஆண்டில் அரசாங்கம் எதிர்பார்த்த வரி வருமானத்தை விட ஷரூ.408 பில்லியன் வரி வருமானம் குறைந்துள்ளது. இதன் படி அரசாங்கம் எதிர்பார்த்த வரி வருமானத்தை ஈட்ட முடியாததால் நாடு இரண்டாவது முறையாகவும் வங்குரோத்து நிலையை நோக்கி நாகர்வதை காண முடிகின்றது.

யுத்தத்தில் வெற்றி பெற்ற நபர்களால் பொருளாதாரத்தையும் வெற்றி கொள்ள முடியாது. ஆனால், இந்த நாட்டின் மக்கள் என்ன செய்தார்கள் என்றால், யுத்தத்தை வென்றவருக்கு பொருளாதாரத்தையும் வெல்ல முடியும் என நம்பி யுத்த வெற்றிபெற்ற நபருக்கு வாக்களித்தார்கள். நாட்டின் பாதுகாப்பை உருவாக்குவது ஒரு விடயம், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது என்பது வேறு விடயம். இதைப் பற்றி இலங்கை மக்கள் சிந்திக்கவில்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் ஒரு நாட்டிற்கு நன்மைகள் கிட்ட வேண்டும், ஆனால் அந்த நன்மைகள் இலங்கைக்கு கிடைக்கவில்லை. சரியான தலைமையை தெரிவு செய்யாததாலேயே அந்த நன்மைகள் மக்களுக்கு கிடைக்கவில்லை. அந்த காரணத்தினால் தான் நாடு படிப்படியாக வங்குரோத்து நிலைக்கு சென்றது.

ராஜபக்ஷக்களின் பொருளாதாரத்தின்படி நாட்டின் வரிகளை குறைத்தார்கள். ஆனால், செலவுகளை அதிகரித்தார்கள். நிதி தேவைகளை ஈடுகட்ட அவர்கள் நேரடி வரிகளைப் பயன்படுத்தாமல் மறைமுக வரிகளைப் பயன படுத்தினர். இவ்வாறு ராஜபக்ஷ பொருளாதாரம் மறைமுக வரிகளை அதிகரித்து சாமானிய மக்கள் மீது அழுத்தம் கொடுத்தது. மறைமுக வரிகளை அதிகரித்து, மீதி வருமானத்தை வசூலிக்க கடன் வாங்கினர். இவ்வாறான பொருளாதாரத்தைத்தான் ராஜபக்ஷக்கள் கையாண்டார்கள்.

அதைப் போலவே தற்போதும் இந்த அரசாங்கத்தினால் எதிர்பார்த்த வரி வருமானத்தை ஈட்ட முடியாத நிலை தோன்றி உள்ளதால், நாடு இரண்டாவது முறையாகவும் வங்குரோத்து நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது" - என்றார். (ரெம-105)

# தேசிய விளையாட்டுச் சம்மேளனங்கள் நான்கின் பதிவுகள் இடைநிறுத்தபட்டன!

தேசிய விளையாட்டுச் சம்மேளனங்கள் நான்கின் பதிவுகளை உடன் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கைத் துவிச்சக்கர வண்டிச் சம்மேளனம், ரக்பி சங்கம், மோட்டார் வாகனச் சம்மேளனம் மற்றும் வலைப்பந்தாட்டச் சம்மேளனம் ஆகிய சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் மேலதிக பணிகளை முன்னெடுப்பதற்கும், சங்கங்களில் தேர்தலை நடத்துவதற்கும் உரிய அதிகாரியாக, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். (04)



# “எரியும் நினைவுகள்” யாழ்ப்பாண நூலகத்தின் கதை ஆவணப் படத்தின் திரையிடலும் கலந்துரையாடலும்





“எரியும் நினைவுகள்” யாழ்ப்பாண நூலகத்தின் கதை - என்னும் ஆவணப் படத்தின் திரையிடலும் கலந்துரையாடலும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

ஆவணப்பட இயக்குநர் எஸ்.சோமிதரன் தலைமையில் திரையிடல் நிகழ்வும் கலந்துரையாடலும் நேற்று மாலை யாழ்ப்பாண பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

குறித்த நிகழ்வில் ஆவணப்பட இயக்குனர் எஸ். சோமிதரன், சிவகுரு ஆதீன குருமுதல்வர்வேலன் சுவாமி, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன், சிவில் சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். ஆவணப்படத் திரையிடலுடன் ஆரம்பமான குறித்த நிகழ்வில் ஆவணப்படம் சார்ந்த கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு தமிழ் சிவில் சமூக அமையம் அனுசரணை வழங்கியிருந்தது. (01)



## முறையான புலம்பெயர்தல், தொற்று நோய் தொடர்பிலான விழிப்புணர்வு திருமலையில்

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட புலம்பெயர்தலுக்கான சங்கங்களுக்கு இடையிலான முறையான புலம்பெயர்தல் மற்றும் சுகாதார ரீதியான தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று இடம் பெற்றது.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வானது, புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (ஐஓஎம்) மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு இணைந்து நடாத்தியிருந்தன.

இன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், பாதுகாப்பான புலம்பெயர்வு ஊடாக புலம் பெயர்தல், முறையான புலம்பெயர்வு மற்றும் சட்ட ரீதியான புலம் பெயர்வு தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.

புலம் பெயர்தலின்போது, தகாத உறவுகளைத் தவிர்த்தலும் தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பிலும் விழிப்புணர்வூட்டப்பட்டது.

“பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வினூடாக வளமான எதிர்காலம்” என்ற எண்ணக் கருவுக்கு அமைய இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வளர்முக நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் சென்று தொழில்களை மேற்கொள்ள முயற்சிப்பதும் கடல் வழி மூலமாக சர்வதேச நாடுகளுக்கு சட்ட விரோதமான புலம்பெயர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதும் பல பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

புலம் பெயர்வின்போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு திணைக்களம் மூலமாக சட்ட ரீதியாக பதிவு செய்து, பாதுகாப்பாக இடம் பெயர்வது பொருத்தமான விடயமாக இங்கு தெளிவூட்டப்பட்டது.

எச் ஐ வி தொற்று நோய் மற்றும் நோய்ப் பரவல் புலம் பெயர்வின் போது ஏற்படுகிறது.

இதனை தடுக்க எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பிலும் மாவட்ட பால்வினை நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் வி.ஶ்ரீகௌரிஸ்வரன் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஜெகன் ஆகியோர்கள் வளவாளர்களாக இணைந்து தெளிவு படுத்தினர்.

முறையான புலம்பெயர்வு தொடர்பில் வளவாளராக ஐஓஎம் இன் திட்ட இணைப்பாளர் (மட்டக்களப்பு) திருமதி மயூரன் மேரி லெம்பேர்ட் கலந்து கொண்டு தெளிவூட்டினார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட இணைப்பாளர், புலம் பெயர்வாளர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சிகரெட் பாவனையால் இலங்கையில் நாளாந்தம் 50 பேர் உயிரிழக்கின்றனர்!

சிகரெட் பாவனையால் இலங்கையில் நாளாந்தம் 50 பேர் உயிரிழப்பதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20,000 பேர் புகைப்பிடிப்பதால் உயிரிழப்பதாக அந்த நிலையம் சுட்டிக்காட்டுகிறது.

நாளை அனுசரிக்கப்படவுள்ள உலக புகையிலை எதிர்ப்பு தினம்தொடர்பாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.




புகையிலைத் தொழிலின் குறுக்கீட்டிலிருந்து நமது குழந்தைகளைப் பாதுகாப்பதே இந்த ஆண்டு உலக புகையிலை எதிர்ப்புத் தினத்தின் தொனிப்பொருளாகும்.

தற்போது இலங்கையில் சிகரெட் பாவனை 9.1 வீதத்தால் குறைந்துள்ளதாகவும், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் சிகரெட் பாவனை வேகமாகக் குறைந்து வருவதாகவும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புகையிலை நிறுவன அறிக்கைகளின்படி, கடந்த ஆண்டில் சிகரெட் உற்பத்தி 19 சதவீதம் குறைந்துள்ளது.

உலகில் சிகரெட் பாவனை குறைவடைந்து வரும் நாடுகளில் இலங்கையில் நல்ல போக்கு காணப்பட்டாலும் இன்னும் சுமார் 1.5 மில்லியன் மக்கள் சிகரெட் பாவனையாளர்களாக இருப்பதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய நிலைவரத்தைக் கருத்தில் கொண்டு, இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சிகரெட் பயன்படுத்துவதைத் தூண்டுவதற்குப் பன்னாட்டுப் புகைப்பொருள் உற்பத்தி, விற்பனை நிறுவனங்கள் பல தந்திரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைப்பிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சுவாச நோய் வைத்திய நிபுணர் சந்தன டி சில்வா தெரிவித்துள்ளமையும் கவனிக்கத்தக்கது. (04)

# சம்பூர் சமரனின் விடியலை தேடி நூல் திருகோணமலையில் அறிமுகவிழா


*(ஹஸ்பர் ஏ.எச் )*

*தெ.கரிதரன் (சம்பூர் சமரன்) எழுதிய கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்வெளியீடான “விடியலைத் தேடி” எனும் சிறுகதை தொகுப்பு நூல் அறிமுக விழா வரும் ஜூலை முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில், கவிஞர் சம்பூரணி தலைமையில் தமிழ் அமுதம் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற உள்ளது.*

*இந்நிகழ்விற்கு முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாண மீன்பிடிப் பணிப்பாளர் சி.சுதாகரனும், கௌரவ அழைப்பாளர்களாக வை.கமலநாதன் (அதிபர்), திருமதி. சி.இலக்கும்தேவி (மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர்), க.யோகானந்தன் (ஓய்வு நிலை அதிபர்), செ.செந்தூரன் (நிறுவுனர்-செல்லக்குட்டி அருணோதயம்), வ.யோகசந்திரன் (ஒருங்கிணைப்பாளர் - அகரம் கலைக்கூடம்) ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.*

*நூலின் முதற் பிரதியினை “வேதாகமமாமணி” பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்களும் சிறப்புப் பிரதியினை வை.பரமலிங்கமும் பெறவுள்ளனர்.*

*நூலுக்கான அறிமுகத்தினை எழுத்தாளர் தி.பவித்திரனும், நூல் திறனாய்வினை திறனாய்வாளர் வ.முரளிதரனும் நிகழ்த்தவுள்ளனர்.*












# ஒரே நேர்கோட்டில் 6 கோள்கள் வரும் அதிசய நிகழ்வு!

ஒரே நேர்கோட்டில் 6 கோள்கள்வரும்அதிசயநிகழ்வு, எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி நிகழ்கிறது.

புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய கோள்கள் ஒவ்வொன்றும் அதற்குரிய கோணத்தில் சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன.

எதிர்வரும் ஜூன் 3 இல், கிழக்குத் திசையில் சூரிய உதயத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னதாக, வியாழன், புதன், யுரேனஸ்,செவ்வாய்,நெப்டியூன், சனி என்ற வரிசையில் ஆறு கோள்கள் ஒரே நேர்கோட்டில் வருவதைப் பூமியில் இருந்து பார்க்கலாம்.

இதில் யுரேனஸ், நெப்டியூன், புதன் ஆகியவை சற்று தூரமாகத் இருப்பதால் அவற்றைத் தொலை நோக்கிகள் மூலம் தெளிவாகப் பார்க்கலாம்.

நமது சூரியப் பாதையில் ஒவ்வொரு கோளும்வெவ்வேறு தூரங்களிலும், வெவ்வேறு சாய்வுக் கோணங்களிலும் சுற்றி வருவதால், அவை எப்போதும் ஒரே நேர்கோட்டில் அணிவகுப்பதற்கு வாய்ப்பு ஏற்படாது.

அவ்வாறு ஒரே வரிசையிலும் ஒரே நேர்கோட்டிலும் அணிவகுத்து வருவது மிக அரிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.

அதேநேரம், கோள்கள் ஒரே நேர்கோட்டில் காணப்படாது என்றும் மாறாக பூமியில் இருந்து பார்க்கும்போது இந்தக் கோள்கள் ஒரே நேர்கோட்டில் இருப்பதுபோல ஒரு மாயத் தோற்றத்தை நமக்கு தரும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

காற்று மற்றும் ஒளி மாசுபாடு இல்லாத, அடிவானம் மறைக்காத சற்று உயரமான இடத்தில் அமர்ந்துகொண்டு பார்த்தால், நம்மால் இந்த நேர்கோட்டு ஜாலத்தைக் காண முடியுமாம். செவ்வாய், சனி ஆகியவை வெறும்கண்ணுக்கேமங்கலாகத் தெரியும்.

ஜூன் மாதம் 3 ஆம் திகதி சனிக்கோளுக்கு கீழேயும், 4 ஆம் திகதி செவ்வாய்க் கோளுக்கு கீழேயும் பிறைச் சந்திரனையும் காணலாம் எனவும் விண்ணியல் ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.05.2024இல் வெளியிடப்பெற்றது.